(ஆ) அதில் எத்தனை வீடுகள், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் வகுப்பை சேர்ந்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது?

(இ) மேற்படி வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு உரிய சதவீதப்படி வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) 64

(ஆ) மூன்று

(இ) தாழ்த்தப்பட்ட வகுப்பினரிடமிருந்து வந்த விண்ணப்பதாரர்கள் மூவருக்கும் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி வகுப்பினரைச் சேர்ந்த எத்தனைப் பேர்கள் இந்த வீடுகள் வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள்? அவர்களில் எத்தனைப் பேர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, முதலில் 3 பேர் கேட்டார்கள். அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அதன் பிறகு ஒருவர் கேட்டார். அவருக்கும் கொடுக்கப்பட்டது. பின்னால் அவர் வேண்டாம் என்று சொல்லி விட்டார். வீடு கொடுத்த 3 பேர்களும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவரவர்களே, மதுரையில் எல்லிஸ் நகரில் வீடு கட்ட நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அது எந்தக் கட்டத்தில் இருக்கிறது? அங்குள்ள நிலச் சொந்தக்காரர்கள் நிலத்தை கொடுத்தும் பணம் கிடைக்கவில்லை நிலமும் அவர்களுக்கு திருப்பிக் கிடைக்கவில்லை, அதனால் அந்த நிலத்தை அவர்கள் பயன்படுத்த முடியாமல் இன்றைக்கு திரிசங்கு சொர்க்கத்தில் நின்று கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி அரசு என்ன முடிவு எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இது ஒரு நல்ல கேள்வி. தனிக் கேள்வியாகப் போட்டால் விவரம் தரப்படும்.

தையல் தொழிலாளருக்கு குறைந்தபட்ச ஊதியம்

*வினா எண். 526— திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தையல் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம் செய்ய அரசிடம் செயற்திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதுபற்றிய விவரம் என்ன?

(இ) எப்பொழுது இது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : குறைந்த அளவு ஊதியச் சட்டத்தின்கீழ் தையல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு இந்த ஊதிய விகிதங்கள் 24-6-81 முதல் நடைமுறைக்கு வந்துள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே இந்த குறைந்தபட்ச ஊதியம் வழங்குவதை அமுலுக்கு கொண்டு வந்ததற்காக, இவ்வளவு காலதாமதமாகி அமுலுக்கு வந்தாலும், நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். குறைந்த பட்ச ஊதியம் எவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது? அதை எந்த தேதியிலிருந்து அமுல்நடத்த அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது? விதிகள் எல்லாம் இயற்றப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, நான் எப்போதும் சொல்வதைப் போல இந்த அரசு எதையும் முன்கூட்டியே செய்யும். அட்டவணையில் இருக்கக்கூடிய வேலைகளுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயம் என்பது ஒன்று, சில வேலைகளை அட்டவணையில் சேர்க்காமல் விட்டுவிடுகிறார்கள். இந்தத் தொழிலை இந்த அரசு வந்த பிறகு 25-11-1978-ல் ஷெட்யூலில் சேர்த்திருக்கிறது. அதன் பிறகு குழு நியமித்து அவர்கள் கூலி நிர்ணயம் செய்தார்கள். 24-6-81 முதல் இது அமுலுக்கு வருகிறது. இதை எதிர்த்து சிலர் வழக்கு மன்றம் சென்றிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டும் இடைக்காலத் தடை கொடுக்கப்பட்டிருக்கிறது. வழக்கு மன்றத்திற்கு செல்லாதவர்கள் இதைச் செயல்படுத்தி வருகிறார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, சில நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் கோர்ட்டுக்குப் போய் தடை பெற்றிருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே இப்படிப்பட்டவர்கள் கோர்ட்டுக்கு போய் ஸ்டே வாங்கி, திட்டத்தை செயல்படுத்தாமல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை அமைச்சரவர்களும் அறிவார்கள். அதைத் தடுப்பதற்கு, காலாகாலத்தில் ஸ்டே வெக்கேஷன் பெட்டிஷன் போட்டு, சீக்கிரமாக விசாரணையை முடித்து, அந்த நிறுவனங்களைச் சேர்ந்த தொழிலாளர்களும் இதனுடைய பலனை அனுபவிக்கிற முறையில் ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம், தலைவரவர்களே, இவ்வளவும் செய்த அரசாங்கம் அதையும் செய்வதற்கு முயற்சி செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு இல. பலராமன்: தலைவரவர்களே, இதைப் போன்ற தொழில்களில் அதிகமான சிறுவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். சிறு வயதிலேயிருந்தே இந்தத் தொழிலில் ஈடுபட்டால்தான் நல்ல பயிற்சி கிடைக்கும் என்று சிறுவர்களுடைய தாய், தந்தையர்கள் நினைக்கிறார்கள். அதை

அரசு உணருமா? அந்த சிறுவர்களுக்கு குறைந்தபட்சமாக என்ன கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே கேள்வியே குறைந்தபட்ச ஊதியத்தைப் பற்றியது. குறைந்த பட்ச ஊதியம் யார், யாருக்கு எவ்வளவு நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்று ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. அதைப் படிக்க அதிக நேரம் ஆகும். தலைவர் அவர்கள் அனுமதித்தால் அதைப்படிக்க நான் தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதை பின்னால் அவையில் வைத்து விடுங்கள்.

கட்டாயச் சேமிப்புத் திட்டம்

* வினா எண் 527 திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மத்திய அரசு கொண்டுவந்த கட்டாய சேமிப்புத் திட்டத்தின் கீழ் தொழிலாளர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட தொகையை எத்தனை தவணைகளில் திரும்பக் கொடுக்கப் பட்டுள்ளது?

(ஆ) இன்னும் எத்தனை தவணை பாக்கி உள்ளது?

(இ) அதனை அரசு எப்போது கொடுக்கும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) (ஆ) மற்றும் (இ) கட்டாய சேமிப்பு திட்டத்தில் அடங்கிய கட்டாயசேமிப்பு சம்பளக் கணக்கிலும், கட்டாய சேமிப்பு கூடுதல் பஞ்சப்படி (பழையது) கணக்கிலும் பிடித்தம் செய்யப்பட்ட எல்லாத் தொகைகளும் ஐந்து தவணைகளில் கொடுக்கப்பட்டு விட்டன.

கட்டாய சேமிப்பு பஞ்சப்படி (புதியது) கணக்கில் பிடித்தம் செய்ததொகையில் மூன்று தவணைகள் கொடுக்கப்பட்டு விட்டன. இன்னும் இரண்டு தவணைகள் அதாவது நான்காவது ஐந்தாவது தவணைகள் மட்டும் கொடுக்கப்பட வேண்டியுள்ளன.

இந்தக் கணக்கில் நான்காவது தவணை ஜூலை 1981ல் திருப்பித் தர தகுதி பெற்றது. அதற்கான விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்பட்டு வருகிறது. ஐந்தாவது தவணை ஜூலை 1982ல் தான் திருப்பித் தர தகுதியடைகிறது.

வேட்டவலத்திற்கு குடிதண்ணீர் வசதி செய்யும் திட்டம்

* வினா எண் 528 திரு ஆர். சுந்தரமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா: